**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.12/2020**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏழுமலை | மதம் | : இந்து |
| த/பெ | : கோவிந்தசாமி | ஜாதி | : -- |
| வயது | : 42 | கிராமம் | : புச்சிரெட்டிபள்ளி |
| தொழில் | : நெசவு | வட்டம் | : திருத்தணி |

**12.03.2026**

**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி வெங்கடேசன் எனக்கு பழக்கமா என்றால் 22 வருடமாக பழக்கம். 1ம் பிரதிவாதி வெங்கடேசன் எனக்கு எதிர் வீடா என்றால் ஆமாம். யார் யார்மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ராதா என்பவர் துளசி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் போலி பத்திரம் தயார் செய்து சொத்தை அபகரித்துவிட்டார் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். அது என்ன சொத்து என்றால் காலி மனையாகும். அதன் அளவுக் தெரியுமா என்றால் 16 அடி அகலம் 100 அடி நீளம் ஆகும். வழக்கு சொத்தின் நான்கு எல்லை தெரியுமா என்றால் மேற்கே ரோசம்மாள், கிழக்கே ராதா வெங்கடேசன், வடக்கே துளசி, தெற்கே கருப்பன் உள்ளனர்.

2. அந்த காலி மனை ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் அவர் வெளியூர் நபர் எனக்கு அவர் விவரம் தெரியாது. துளசி எந்த வருடம் வாங்கினார் என்றால் எனக்கு தேதி, வருடம் தெரியாது. துளசியம்மாளின் ஆவணம் பொய்யானது என்று சொல்லியிருப்பதில் நான் அந்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. துளசியம்மாள் பொய்யாக வாங்கினார்களா

அல்லது உண்மையாக வாங்கினார்களா என்பது எனக்கு தெரியுமா என்றாலும் அந்த பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றாலும் நான் படித்து பார்க்கவில்லை. பத்திரத்தை படித்து பார்க்கமலேயே அந்த ஆவணம் பொய்யானது என்று சொல்ல முடியுமா என்றால் ராதம்மாள் பத்திரத்தை நான் 20 வருடங்களாக பார்த்துள்ளேன். ராதம்மாள் ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்பது சொல்ல முடியுமா என்றால் வருடம் ஞாபகமில்லை. ராதாவின் மாமனார் குருநாதன் என்பவர் ராதா, வெங்கடேசனுக்கு எழுதி கொடுத்துள்ளார்.

3. குருநாதன் என்பவர் ராதா, வெங்கடேசனுக்கு எழுதிய ஆவணத்தை நான் பார்த்தேனா என்றால் பார்த்துள்ளேன். அதை வைத்து அவர்கள் வங்கியில் கடனும் வாங்கியுள்ளார்கள். அதில் நான் கையெழுத்தும் போட்டுள்ளேன். எந்த வருடம் கடன் வாங்கினார்கள் என்றால் 2017ல் வாங்கினார்கள். 20 வருடங்களாக அந்த ஆவணம் தெரியும் என்பதையோ கடன் பெற்ற விவரத்தையோ அதில் நான் சாட்சி கையெழுத்து போட்ட விவரத்தையோ எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் தற்போதுதான் சொல்கிறேன். அப்போது சொல்லவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ம் வகுப்பு படித்துள்ளேன்.

4. ராதம்மாள் வழக்கு தாக்கல் செய்யும்போது என்ன விவரம் கூறி தாக்கல் செய்தார் என்பது தெரியுமா என்றால் தன்னுடைய இடத்தை துளசி எப்படி வாங்கினார் என்று வழக்கு தாக்கல் செய்தார். இவ்வாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு போட்ட போது தெரியாது. வழக்கு தாக்கல் செய்த 2 வருடங்களுக்கு பின்பு தெரியும். எத்தனை வருடங்களாக இந்த வழக்கு நிலுவையில் உள்ளது என்பது தெரியும் என்றால் 4 வருடங்களாக தெரியும். வெங்கடேசன் சொத்தில் குப்பை கொட்டி மாடு கட்டியுள்ளார் என்று கூறியுள்ளேன் என்றால் தற்போது இல்லை. எத்தனை வருடங்களாக அங்கு வெங்கடேசன் மாடு கட்டி குப்பை கொட்டவில்லை என்றால் 4 வருடங்களாக அவ்வாறு இல்லை.

5. மாடு கட்டி குப்பை கொட்டியுள்ளதாக வெங்கடேசன் என்னை

சொல்ல சொன்னாரா என்றால் இல்லை. நான் பார்த்தேன். ராதா தாக்கல் செய்த வழக்கில் மாடு கட்டி குப்பை கொட்டியுள்ளேன் என்ற விவரத்தை அவர்களே சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது. ராதா சொல்லாத விவரத்தை நான் இட்டுகட்டி சொல்கிறேன் என்றாலும் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வெங்கடேசன் வாய்மொழியாக சொல்லியதை வைத்து நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. குப்பையா செட்டியை தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து குப்பையா செட்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் இல்லை. குப்பையா செட்டி வகையறாவிடமிருந்து வாதி துளசி வாங்கி அனுபவித்து வருகிறார் என்றாலும் வாதி வாங்கியுள்ளதே உண்மையான கிரைய ஆவணம் என்றாலும் சரியல்ல. வாதி கிரையம் வாங்கி நில அளவை செய்தார் என்றால் நில அளவை செய்த விவரம் தெரியும். நில அளவை செய்து விசாரணை செய்து வாதிக்கு பட்டா கொடுத்துவிட்டார் என்றால் பட்டா வாங்கியது தெரியாது. எனக்கு எந்த விவரமும் தெரியாமல் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)